# கிறிஸ்தவ நாகரிகம் - 49/T/II

## கிறிஸ்தவ நாகரிகம்

## பகுதி – I

1. *ஆதித் திருச்சபையில் இருந்த இறையியல் கொள்கைகளை அறிவதுடன், ஆரம்ப காலத் திருச்சபையின் தந்தையர்களை இனங்கண்டு, மத்தியகாலத்தில் கல்வி மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு திருச்சபையின் பங்களிப்பினை விளங்கிக் கொள்வர். அத்துடன் கல்வி, தொழில்சார் துறைகளின் வளர்ச்சிக்கு இலங்கைத் தலத்திருச்சபை வழங்கிய பங்களிப்பினையும் தெரிந்து கொள்வர்.*

(i) அலெக்ஸாந்திரிய, அந்தியோக்கிய கல்லூரிகளின் படிப்பினைகள் இரண்டு வீதம் எழுதுக.

அலெக்சாந்திரிய இறையியற் கல்லூரி:

- கிறிஸ்துவின் தெய்வீகத்தை வலியுறுத்தினர். மனிதத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.
- திருவிவியத்தை விளக்க உருவக விளக்க முறையைப் பயன்படுத்தியமை.
- இறையியலை விளக்க பிளேற்றோவின் மெய்யியற் கருத்துக்களை பயன்படுத்தி கருத்துக்களை வெளியிட்டமை.
- இறையியலை மூவொரு இறைவனின் ஒருமைப்பாட்டிலிருந்து ஆராய்ந்தமை.
- கிறிஸ்துவின் இறையியலை விலியுறுத்தி "மனிதவதாரம் எடுத்த கடவுள்" என்னும் கருத்தை முன்வைத்து கிறிஸ்துவின் மனித இயல்பைக் குறைத்து போதித்தமை.
- ஆரிய பேகத்திற்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தமை.

அந்தியோக்கிய இறையியல் கல்லூரி:

- கிறிஸ்துவின் மனிதத்தன்மையை வலியுறுத்தி தெய்வீகத்தை ஏற்றனர்.
- ஆரிய பேதகத்திற்கு வழிவகுத்தனர்.
- அரிஸ்ரோட்டிலின் மெய்யியலைப் பயன்படுத்தினர்.
- எபிரேய விவிலியத்தின் உதவியுடன் கிரேக்க விவிலியத்தை மறுபதிப்பு செய்தமை.
- விவிலிய ஆராய்ச்சியில் கவனம் செலுத்தியமை.
- திருவிவிலியத்தை விளக்குவதற்கு நேர்பொருள் உட்கருத்தை பயன்படுத்தியமை.
- இறையியலில் மூவொரு இறைவன் (மூன்று ஆட்கள், ஒரே இறைவன்) என்ற கருத்தை வலியுறுத்தினர்.
- கிறிஸ்துவின் மனித, தெய்வீக இயல்புகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தமை.
- பல இறையியலாளர்களை திருச்சபைக்கு அளித்தமை.
- பல கிரேக்க கிறிஸ்தவ இலக்கியங்களை திருச்சபைக்கு அளித்தமை.

රහස්‍යයි
அந்தரங்கமானது

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை

## අ.පො.ස.(උ.පෙළ) විභාගය - 2015
க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2015

විෂයය අංකය / பாட இலக்கம் } 49 විෂයය / பாடம் } கிறிஸ்தவ நாகரிகம்

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம் - I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 4 | 31. | 4 | 41. | 5 |
| 02 | 2,5 | 12. | 5 | 22. | 1 | 32. | 2 | 42. | 3 |
| 03 | 2 | 13. | 4 | 23. | 5 | 33. | 1 | 43. | 4 |
| 04 | 4 | 14. | 1 | 24. | 4 | 34. | 2 | 44. | 1 |
| 05 | 5 | 15. | 4 | 25. | All | 35. | 1 | 45. | 4 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 5 | 36. | 1 | 46. | 3 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 5 | 37. | 4 | 47. | 1 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 3 | 38. | 3 | 48. | 3 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 2 | 39. | 4 | 49. | 1 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 5 | 40 | 1 | 50 | 3 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු / புள்ளி **02** බැගින் / வீதம் 50

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 2×50 = 100

(ii) ஆரம்பத்திருச்சபையின் தந்தையர்கள் நால்வரைப் பெயரிடுக.

- அலெக்ஸாந்திரிய சிறில்
- பசில்
- ஜோண் கிறிஸ்சொஸ்தம்
- அத்தனாசியார்
- அந்தியோக்கு இஞ்ஞாசியார்
- இரேணியுஸ்
- யஸ்ரின்
- ஒரிஜின்
- தேர்த்தூலியன்
- அலெக்ஸாந்திரிய கிளமென்ற்

(iii) மத்திய காலத்தில் கல்வி முன்னேற்றத்திற்குத் திருச்சபை ஆற்றியுள்ள நான்கு பங்களிப்புக்களைக் குறிப்பிடுக.

- மன்னன் சாளிமேனனின் ஆணைப்படி ஆரம்பக்கல்வித் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தல்.
- கதீற்றல் பாடசாலைகள் ஐரோப்பியக் கல்வியின் தலைமைத் தளங்களாகியமை.
- பல்கலைக்கழகங்களின் தோற்றம்.
- பண்டைய கிரேக்க அறிவும் இஸ்லாமிய அறிவும் ஐரேப்பியாவிற்கு கொண்டுவரப்பட்டமை.
- லத்தீன்மொழி அறிவிலும் இலக்கண அறிவிலும் உரோமை இலக்கியங்களைப் படிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தியமை.
- இலத்தீன் மொழியிலிருந்து பல இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டமை.
- அவர்களின் மடாலயங்களில் இலத்தீன், கிரேக்க மொழிகள் கற்பிக்கப்பட்டன.
- நூல் நிலையங்களின் தோற்றத்திற்கு வித்திடப்பட்டது.
- ஏழைகளுக்கும், செல்வருக்கும் இலவசக் கல்வியளித்தது.
- பின் மத்திய காலத்தில் பெண்களுக்கு கல்வி வழங்கப்பட்டது.

(iv) விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்த நான்கு கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பெயர்களை எழுதுக.

- மேரி கியூரி
- லூயி பாஸ்ரர்
- அகஸ்தீனிய சபைத்துறவி ஜோர்ஜ் மெண்டல்
- கொப்பனிக்கஸ்
- கலிலியோ
- சேர் ஐசாக் நியூட்டன்
- ரெயார்ட் டி சார்டைன் அடிகள்
- அலெக்ஸான்டர் கிரஹம்பெல்
- அல்பேட் ஐன்ஸ்டைன்
- அலெக்ஸான்டர் பிளமிங்

(v) கல்வி, தொழில்சார் சேவைகளின் முன்னேற்றத்திற்கு இலங்கைத் திருச்சபை பங்களித்துள்ள விதங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

- விடுதிப் பாடசாலைகள், கட்புலன், செவிப்புலனற்றவர்களுக்கான பாடசாலைகள் ஆரம்பித்து நடத்தியமை.
- ஐரோப்பிய மிசனரிமாரால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் தோற்றம் பெற்றமை.
- கல்வி நடவடிக்கைகளை கவனிக்க துறவறசபைகள் முன்வந்தமை.
- தேசிய மொழிகளில் கல்வித்துறை வளர்ச்சியடையச் செய்வதற்கு இலங்கையில் துறவற சபைகள் நிறுவப்பட்டமை.
- மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டமை. (உ+ம்) கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
- அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்டமை.
- தொழிநுட்ப பயிற்சிகள் அளிக்க நிறுவனங்கள் அமைத்தமை.
- சிறுகைத்தொழில் முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ஆங்கில மொழியை கற்பித்தமை.

2. *ஆசிய ஆயர் பேரவையின் உறுப்பு நாடுகள் பற்றியும் இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் பற்றியும் தெரிந்து கொள்வதுடன், ஆதிக்கிறிஸ்தவர்களின் சமூக வாழ்வு பற்றியும் அவர்களிடம் இருந்த கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய எதிர்பார்ப்புக்கள் பற்றியும் அறிந்து, 4ம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவம் உரோமைப் பேரரசில் பரவ ஏதுவாயிருந்த காரணிகளையும் எடுத்துரைப்பர்.*

(i) ஆசிய ஆயர் பேரவையின் உறுப்பினர்களாகப் பங்குகொள்ளும் நான்கு நாடுகளைப் பெயரிடுக.

- இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மியன்மார், தாய்லாந்து, கம்போடியா லாவோஸ், வியட்னாம், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர், புருனாய், ஜப்பான், தென்கொரியா, தாய்வான், கசகஸ்தான்.

(ii) இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் நான்கு திருச்சபைகளைப் பெயரிடுக.

- பப்ரிஸ்ற், அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, பிறெஸ்பிற்ரேறியன் திருச்சபை, இரட்சணிய சேனை., ஒல்லாந்து இரங்கிறந்த சபை

(iii) ஆரம்பக் கிறிஸ்தவர்களின் சமூக வாழ்வியல்களில் காணப்பட்ட நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

- திருத்தூதர் படிப்பினைக் கேட்டல்
- நட்புறவு
- அப்பம் பிட்குதல்
- பொதுவுடமை
- கூடிவாழ்தல்
- அடிமைகளையும் சகோதரராய் ஏற்றுக்கொண்டது
- அவர்களின் அடிமை நிலையிலிருந்து விடுவித்தல்
- எளிமையான வாழ்க்கை வாழ்தல்
- மகிழ்ச்சியோடு வாழ்தல்
- முன்னுதாரணமான வாழ்வு

(iv) 4ஆம் நூற்றாண்டிலிருந்து உரோமையப் பேரரசில் கிறிஸ்தவம் பரவ ஏதுவான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

- உரோமைப் பேரரசெங்கும் கிரேக்க மொழி பேசப்பட்டமை. / - தலைப்பணை ✓ - வேதாகமங்கள்
- உரோமையில் நிலவிய அமைதி.
- நல்ல போக்குவரத்துக்கான சிறந்த வீதியமைப்பு.
- அரச உதவி கிடைத்தல்.
- கிறிஸ்தவ மதத்திற்கு அரச அங்கீகாரம் கிடைத்தல்.
- கிறிஸ்தவ மறைக்குச் சுதந்திரம் கிடைத்தது.
- மதச் சுதந்திரம் பேணப்பட்டது.
- துறவற சபைகளின் பணி. (ஆசீர்வாதப்பர் சபையினரின் கல்விப்பணி)
- நாகரிகமடையாத மக்களின் மனமாற்றம்.
- குளோவிஸ் (குளோத்தில்டா) மனமாற்றம்.

(v) "கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வெகுவிரைவில் நிகழவிருக்கிறது" என்னும் எதிர்பார்ப்பு ஆரம்பத் திருச்சபையினரின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்திய நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

- வேலை /மற்றும் திருமணம் செய்வதை தவிர்த்து வாழ்ந்தது.
- இரண்டாம் வருகை எப்போது நிகழுமெனக் காத்திருந்தது.
- எச்சரிக்கையுடன் வாழ்ந்தனர்.
- அறிவுத் தெளிவோடு விழிப்போடு காத்திருந்தனர்.
- நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்குடன் வாழ்ந்தனர்.
- வாழ்வு பற்றிய கருத்தியலில் முற்போக்கான மாற்றம்.

3. *புனித இஞ்ஞாசியாரின் எழுத்தாக்கத்திற்கு உதவிய நூல்களையும், புனித சிலுவை அருளப்பரின் ஆன்மீக வாழ்வு பற்றிய நூல்களையும் தெரிந்து கொள்வர். அத்துடன் புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின் இயேசு சபையினர் கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்த இடங்களையும் புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் காரணமாக கத்தோலிக்க திருச்சபை அடைந்த நன்மைகளையும் அறிந்து 'மொசேயிக் கலை' பற்றியும் விளங்கிக் கொள்வர்.*

(i) புனித இஞ்ஞாசியார் தமது 'ஆன்மீகப் பயிற்சிகள்' (Spiritual exercises) என்னும் நூலை எழுதுவதற்கு உதவியாயமைந்த நான்கு நூல்களைப் பெயரிடுக.

- கிறிஸ்துவின் வாழ்க்கை
- புனிதர்களின் வரலாறு
- சபையின் ஒழுங்கு நூல்
- திருவிவிலியம்

(ii) புனித சிலுவை அருளப்பர் ஆன்மீக வாழ்வு பற்றி எழுதிய நான்கு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

- கார்மேல் மலை ஏற்றம்
- அன்பின் அணையாச் சுவாலை
- இருண்ட இரவு
- ஆன்மீகப் பாடல் (ஆன்மீக கீதம்)

(iii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின் இயேசு சபையினர் கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்த நான்கு நாடுகளைக் குறிப்பிடுக.

- கனடா
- குறோயீ தீவு
- இந்தியா
- ஜப்பான்
- சீனா
- வட அமெரிக்கா
- கொரியா

(iv) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் காரணமாக கத்தோலிக்க திருச்சபை அடைந்த நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக.

- திரிதெந்தீன் சங்கம் கூட்டப்பட்டமை.
- திருச்சபையின் ஒழுங்குகள், கோட்பாடுகள் உருவாக்கப்பட்டமை.
- குருக்களுக்கான குருமடம் உருவாக்கப்பட்டமை.
- புதிய துறவற சபைகள் உருவாக்கப்பட்டமை.
- வெளிநாட்டிற்கு வேதபோதகப் பணியாளர் அனுப்பப்பட்டு திருச்சபையின் படிப்பினைகள் தெளிவுபடுத்தப்பட்டமை.
- பங்குப் பணிவாழ்வு புதுப்பிக்கப்பட்டது.
- திருவிவிலியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை.
- திருச்சபையில் அதிக ஒழுங்குமுறையான செயற்பாடுகள் வலியுறுத்தப்பட்டது.
- புதுப்பித்தல் வலியுறுத்தப்பட்டது.

(v) 'மொசேயிக் கலை'யின் நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

- சித்திரம் அழகாகவும் ஒளியூட்டுவதாகவும் இருக்கும்.
- மனிதனின் பலவீனத்தை இதில் காணமுடியாது.
- கண்ணாடித் துண்டுகளால் செய்யப்பட்ட சித்திரங்கள் வன்மையானவையாகும்.
- அணியப்பட்ட ஆடைகளின் சுருக்கங்கள் இல்லை.
- பக்தியோடு நோக்குவோருக்கு நித்திய காலத்தையம் உலகமுடிவையும் காட்டுகின்றது.
- இயற்கைத் தன்மையை விட அரூபத் தன்மை கொண்டது.
- முகத்தோற்றம் பயம் நிறைந்ததாக காட்டும்.

## பகுதி – 11

4. உலக நாகரிகமும் கிறிஸ்தவ நாகரிகமும் ஒன்றின் முன்னேற்றத்திற்கு மற்றையது பங்களிப்புச் செய்துள்ள தன்மைகளை தெளிவு படுத்துவர்.

(i) நைல் நதி நாகரிகம் பற்றி விளக்குக.

- மிகவும் பழமை வாய்ந்த நாகரிகம்.
- கி.மு 3300 முதல் கி.மு 1070 வரை இந்நதிக்கரை நாகரிகமானது நிர்வாக, பொருளாதார சமூக கலாசார விடயங்களில் சிறந்து விளங்கியது.
- இந் நாகரிகமானது ஆபிரிக்கா கண்டத்தின் (மிசிர்) எகிப்து பிரதேசத்தில் நைல் நதியை அண்டி வளர்ச்சியடைந்தது.
- எகிப்து வாணிப மத்திய நிலையமாகக் காணப்பட்டது.
- வாற்கோதுமை, கோதுமை, மிலற் முதலிய தானியங்கள் வளர்ப்பதற்கு உகந்த வளமான மண்
- ஆட்சி அதிகாரம் தெய்வத்திடமிருந்தே அரசனுக்கு கிடைப்பதாக நம்பினர். அத்துடன் லௌகீகத் தலைவனாகவும், ஆன்மீகத் தலைவனாகவும் அரசர் விளங்கினர்.
- அரசர்கள் பார்வோன் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டனர்.
- பெரும்பாலும் ஆட்சியுரிமை தந்தையிடமிருந்து மகனுக்குரியதாக கருதப்பட்டது.
- ஆண்பிள்ளைகள் இல்லாத இடத்து பெண்பிள்ளைகளும் ஆட்சிப் பீடம் ஏற அனுமதிக்கப்பட்டது.
- பப்பிரஸ் என்ற புல் எழுதப் பயன்பட்டது.
- அவர்கள் இயற்கை தெய்வங்களை வழிபட்டனர்.
- மரணத்தின்பின் வாழ்வு உண்டு என்ற கோட்பாடு.
- கணித எண்ணக்கருக்கள் ஆண்டுகள், மாதங்கள், தினங்களைக் கணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன.

(ii) பலஸ்தீனத்திற்கு அண்மையிலுள்ள நாடுகளில் அக்காலத்தில் காணப்பட்ட நாகரிகங்கள், யூத நாகரிகத்தின் முன்னேற்றத்தில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கினை விளக்குக.

- சுமேரிய நாகரிகம்
- எகிப்திய நாகரிகம்
- அசீரிய நாகரிகம்
- பபிலோனிய நாகரிகம்
- பாரசீக நாகரிகம்
- பலஸ்தீனா ஓர் சிறிய நாடு. மத்தியதரைக் கடல்பகுதியில் அமைந்துள்ளது. செழிப்பானது. பலம்வாய்ந்த நாடுகளால் சூழப்பட்டுள்ளது. சூழவுள்ள நாடுகளின் கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டது. (எகிப்தியர், மோவாப்பியர், ஏதோமியர், கனானியர், பிலிஸ்தியர்)
- விவசாய வாழ்க்கை முறை
- நிர்வாக முறைகள்
- சட்டவாக்க முறைமைகள்
- சமய, சம்பிரதாய வாழ்க்கை முறைமைகள்
- இலக்கியங்கள்
- கட்டிடக்கலைகள்
- போர்த்தந்திரோபாயங்கள்
- இஸ்ராயேலைச் சூழவுள்ள நாகரிகங்களில் இருந்து பல கடவுட் கோட்பாடுகளின் செல்வாக்குகள்

(ii.) கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தால் எவ்வாறு புதிய சமூகம் உருவாக்கப்பட்டது என்பதனை விபரிக்குக.

- யூத சமூகத்தில் இல்லாத பின்வரும் விழுமியங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன:
    - பணிவிடைத் தலைமைத்துவத்தை அறிமுகப்படுத்தியது
    - ஏழைகளிலும்,கைம்பெண்களிலும் அக்கறை கொண்டு அவர்களுக்கு பணிபுரிய திருத் தொண்டர்களை ஏற்படுத்தி அப்பணியை ஊக்குவித்தது. இவர்கள் அறப்பணி மட்டுமல்லாமல் போதித்தல், திருமுழுக்கு கொடுத்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டனர்.
    - கொர்னேலியுவின் மனமாற்றத்தின் பின் அந்தியோக்கியாவில் புறவினக் கலப்புத் திருச்சபையை உருவாக்கி இறையாட்சி அனைவருக்கும் உரியது என்ற பொதுமைக் கருத்தை ஏற்படுத்தியது.
    - திருச்சபையின் ஆட்சியமைப்பு (அதிகாரப் பகிர்வு) பகிரப்பட்டு பொதுநிலைத் தலைமைத்துவம் ஊக்குவிக்கப்பட்டது. (மூப்பர்கள் நியமிக்கப்பட்டது)
- பரிசுத்த ஆவியால் திருச்சபை செயலாக்கம் பெற்றதுடன் பேதுருவின் தலைமைத்துவத்தின் கீழ் தொடக்ககால திருச்சபை வளரத் தொடங்கியது.
- ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை பலரைக் கவர்ந்தது.
- ஸ்தேவானின் மரணத்தின் பின் ஜெருசலேமிற்கு வெளியே நற்செய்தி பரவுதல். இதனால் கிறிஸ்தவ சமூதாயங்கள் குடியேற்றங்கள், நகரங்கள் உருவாகின.
- எருசலேம் பொதுச்சங்கம்

(iv) ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சிக்குத் திருச்சபை எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை விளக்குக.

- உடல், உழைப்பின் மகத்துவத்தை புனித ஆசிர்வாதப்பர் துறவிகள் முன்னிலைப்படுத்தி ஐரோப்பாவில் பல்வேறு விதமான விவசாய விருத்திக்கு உதவினர். உடல் உழைப்பு, ஒழுக்கம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இது மேலைத்தேசத்தில் உடல் உழைப்பை பற்றிய மதிப்பையும் பண்பையும் உருவாக்கியது.
- எல்லாத் தொழில்களின் சமத்துவத்தை வலியுறுத்தனர். (துறவிகள் அனைத்துத் தொழில்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர். (கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, உழுதல், நெசவு செய்தல்).– காடுகளை அழித்து சிறந்த விவசாய நிலங்களாக மாற்றி ஐரோப்பாவில் விவசாயத்தை வளர்த்தனர்.
- ஐரோப்பாவில் கல்வியை எல்லோருக்குமாக அறிமுகம் செய்து ஆரம்பத்தில் பள்ளிகளையும், பின்னர் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் அறிமுகம் செய்தனர். கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் தோற்றம், பலபுதிய கண்டுபிடிப்புக்களிற்கு வழிவகுத்தது. இது மக்களுடைய வாழ்வுக்கு பல வசதிகளை ஏற்படுத்தியது.
- நாகரிகமடையாத மக்களை விவசாயத்திலீடுபடுத்தி, வேறு தொழில்களையும் அறிமுகப்படுத்தி, துறவற மடங்களுக்கண்மையில் குடியமர்த்தி, நாகரீகமடையாத மக்களின் புதிய ஒழுக்க வாழ்வுக்கு வித்திட்டனர்.
- புனித ஆசிர்வாதப்பர் துறவிகள் உடல் உழைப்பு, ஒழுக்கம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இது மேலைத்தேசத்தில் உடல் உழைப்பை பற்றிய மதிப்பையும் பண்பையும் உருவாக்கியது.
- துறவற மடங்களிலும் பாடசாலைகளிலும விவிலியம், பண்டைய இலத்தீன் சிறப்பிலக்கியங்கள், திருச்சபைத் தந்தையர்களின் ஆக்கங்கள் பாடநூல்களாகக் கற்பிக்கப்பட்டன. இப் பாடசாலைகளில் பாடநூல்களை பிரதியெடுக்கும் பணிகளில் பங்களிப்புச் செய்தனர்.

5. *திருச்சபையின் ஆச்சிரம வாழ்வின் ஆரம்பம் பற்றியும் இரவல் சபைகளின் தோற்றத்திற்கான பின்புலம் பற்றியும், திருச்சபையின் ஆன்மீக, சமூக விருத்திக்கு ஆச்சிரம, துறவற சபைகள் ஆற்றிய பங்களிப்பினையும் விளங்கிக் கொள்வர்.*

(i) ஆச்சிரம வாழ்வின் ஆரம்பம் பற்றி விபரிக்குக.

- கும்ரான், எஸ்சீனியர் சமூகத்திடமிருந்து பல வழிகாட்டுதல்களைப் பெற்றிருக்க முடியும்.
- எகிப்து, சீரியா நாடுகளில் கிறிஸ்தவ ஆச்சிரம வாழ்வு ஆரம்பித்தது. இது கிறிஸ்தவத்தின் ஆச்சிரம வாழ்வின் ஆரம்பமாகும்.
- கிறிஸ்தவ ஆரம்ப ஆச்சிரம வாழ்வின் சில பண்புகளாவன:
  - வனாந்திரத்திற்கும், காடுகளுக்கும் சென்று வாழ்தல்
  - ஏகாந்த வாழ்வு
  - எளிமையான வாழ்வு
  - நீண்ட செபம்
  - நோன்பு
  - தியானமும் மௌனமும்
- வனத்து அந்தோனியார் முதலாவது ஆச்சிரமத் துறவியாகக் கருதப்படுகிறார். ஆனால் பக்கோமியஸ் என்பவரே திருச்சபையின் ஆச்சிரம வாழ்வைத் திட்டமிட்டு ஒழுங்கு படுத்தியவராவர். (உ+ம் துறவிகள் எல்லோரும் செபத்திற்கும், உணவுக்கும் ஒன்று கூடி வர வேண்டும்)
- திருச்சபையின் ஆச்சிரம வாழ்வின் யாப்பை முதலில் எழுதியவர் புனித பசில் ஆவார்.
- ஏகாந்த நிலையிலாரம்பித்த ஆச்சிரம வாழ்வு பின் படிப்படியாக ஆச்சிரம குழுமவாழ்வாக பரிணமித்தது.
- புனித ஆசீர்வாதப்பர் திருச்சபையின் மேலைத்தேய ஆச்சிரம வாழ்வை ஒழுங்கமைத்து விதி முறைகளை வழங்கியவராவார். அவ் விதிமுறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன.

(ii) வேலை மட்டில் ஆசீர்வாதப்பர் சபைத்துறவிகளின் மனப்பாங்கை விளக்குக.

- வேலை செய்வது அவர்களது துறவுவாழ்வின் முக்கிய விடயமாகக் கருதப்பட்டது.
- முழுவதும் வேலையிலீடுபட்டிருப்பது பாவச் சோதனைகளிலிருந்து விடுபட ஒரு வழியாகக் கருதப்பட்டது.
- ஆரம்பத்தில் உடல் உழைப்பு அடிமைகளுக்குரியதாகக் கருதப்பட்டது. பின் துறவிகளால் அதற்கு முற்றும் புதிய அர்த்தம் கொடுக்கபட்டது.
- "உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது" என்ற பவுலின் படிப்பினையை ஆழமாக உணர்ந்துகொண்டு தங்கள் சபையின் விருதுவாக்காக (செபமும் வேலையும்) உடல் உழைப்பை முதன்மைப்படுத்தினர்.
- ஐரோப்பாவின் விவசாயத்திற்கு இவர்கள் வழங்கிய பங்களிப்பு நாகரிகமடையாத மக்களை விவசாயிகளாக மாற்றியது.
- துறவிகளின் மடங்கள் சீர்திருத்தம் அடையாத மக்களுக்கு தொழிநுட்ப பாடசாலைகளாக மாறின.
- நாகரிகமடையாத மக்களுக்கு உழைப்பின் மேன்மையை உணர்த்தினர். விவசாயத்துடன் மற்றைய எல்லா வேலைகளையும் (மேசன் வேலை, தச்சு வேலை, சிறுகைத்தொழில்கள்) கற்றுக் கொடுத்தனர்.

(iii) இரவலர் சபைகளின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த பின்புலத்தை விபரிக்குக.

- உலகியல் போக்கு திருச்சபையில் வளர்ந்து சொத்துக்களைச் சேர்த்தல் முக்கிய நோக்காக மாறி பெரும் ஆன்மீக வீழ்ச்சி ஏற்பட்ட வேளையில், இரவலர் சபைகள் தோன்றி அந்நிலையிலிருந்து திருச்சபையை மீட்கச் செயற்பட்டன.
- இதை அடிப்படையாகக் கொண்டு ஏழ்மையை வலியுறுத்தி புதுப்பித்தலை ஏற்படுத்த செயற்பட்டன.
- நற்செய்தியை மையமாகக் கொண்ட ஏழ்மையை விலியுறுத்தி, ஏழையராய் வாழ்தலையும் இரந்து அல்லது யாசித்து உண்பதையும் அறிமுகப்படுத்தினர். (வல்தேசியன் சபை, பிரான்சிஸ்கன் சபை, டொமினிக்கன் சபை)
- திருச்சபைத் தலைவர்கள் நீண்டகாலமாக சிலுவைப்போர்கள் புரிவதில் தம் சக்தியையும் வளங்களையும் செலவிட்டனர். ஆனால் சிலுவைப் போர்களில் ஈடுபடுவதைவிட ஆன்மீகப் போராட்டத்தில் ஈடுபடுவதே சிறந்தது என்பதை இச்சபைகள் முன்வைத்தன.

(iv) ஐரோப்பாவில் கல்வி வளர்ச்சிக்கு ஆச்சிரம, துறவற சபைகளின் பங்களிப்பை விளக்குக.

- உரோமைய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி, அக்கால ஐரோப்பாவின் கல்வி நிலையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.
- கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த சபைகளில் ஆசீர்வாதப்பர் சபையினர் பிரதானமானவர்கள். தம் துறவற மையங்களுக்கு அருகில் பாடசாலைகளை ஆரம்பித்து இல்லறத்தினரையம், கல்விகற்க ஊக்குவித்தனர்.
- நாகரிகமடையாத மக்களை சீர்திருத்தவும் கிறிஸ்தவ நெறியில் உருவாக்கவும் கல்வி இன்றியமையாத ஊடகமாக இருந்தது. துறவிகள் மடங்களால் நடாத்தப்பட்ட பாடசாலைகள் மூலமாக கல்வியை வழங்கினர்.
- இளம் வயதினருக்கு லத்தீன் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக் கொடுத்தனர்.
- பாடநூல்களைப் பிரதியெடுத்தலில் பங்களிப்புச் செய்தனர். கையெழுத்துப் பிரதிகளுக்கான தோலைப் பதனிட்டமை.
- பாடசாலைக் கல்வி மூலமாக ஆரம்பக் கல்விக்கு வித்திட்டமை.
- கதீற்றல் பாடசாலைகள் மூலமாக இடைநிலைக் கல்வியை நிலைநிறுத்தியமை.
- பல்கலைக்கழகங்கள் மூலமாக உயர் கல்விக்கு வித்திட்டமை.

6. *ஆரம்ப காலம் முதல் திருச்சபை நலன்புரி, மனித நேயப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளமையையும், திருதெந்து சங்கத்தின் பின் துறவற சபைகளால் இப்பணிகள் எவ்விதம் முன்னெடுக்கப்பட்டன என்பதையும் இலங்கையில் இப்பணிகள் எவ்விதம் ஆற்றப்பட்டன என்பதையும் இனங்கண்டு தெளிவாக்குவர்.*

(i) ஆரம்ப காலத்தில் திருச்சபை மனித நேயப் பணிகளில் ஈடுபட்ட விதத்தினை விபரிக்குக.

- திருத்தொண்டர்களை நியமித்தல். தி.ப. 6:1-7 இதன் காரணம் அன்றாடப் பந்தியில் தம் கைம் பெண்கள் முறையாகக் கவனிக்கப்படுவதில்லையென கிரேக்கமொழி பேசுவோர் எபிரேய மொழி பேசுவோருக்கெதிராக முணுமுணுத்தனர். எனவே மனிதநேயப் பணிகளில் ஈடுபடுவதற்காக திருத்தொண்டர் எனப்படும் புதிய பணிநிலையை திருச்சபை உருவாக்கியது. (ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்தேவான், பிலிப்பு... ஆகியோர்)
- புனித லோரன்ஸ் கைதுசெய்யப்பட்டு திருச்சபைச் சொத்துக்களை ஒப்படைக்கக் கேட்டபோது ஏழைகளும் கைம் பெண்களுமே திருச்சபை சொத்துக்கள் என்று காண்பித்தார். இதன் மூலம் திருச்சபையானது ஏழைகள் மற்றும் சமுதாயத்தில் ஓரம் கட்டப்பட்டவர்களுடன் இருந்தது தெளிவாகிறது.
- ஆதித் திருச்சபையில் வெவ்வேறு தலத் திருச்சபைகள் வறுமையுற்றிருந்த திருச்சபைகளுக்கு உதவின. (தி.ப 11:29-30) அந்தியோக்கியாவிலிருந்து பொருளுதவியை யூதேயாவிலிருந்த சகோதரர்களுக்கு அனுப்பினர்.
- பிலிப்பி நகரத் திருச்சபை பவுலின் அருப்பணிகளுக்கு எப்பாபிராத்து மூலம் பொருளுதவியை அனுப்பினர்.
- ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தில் உள்ளவர்கள் இல்லாதவருடன் தம் சொத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

(ii) திருதெந்து சங்கத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகள் மனித நேயப்பணிகளிலும் நலன்புரிப் பணிகளிலும் ஈடுபட்ட விதத்தினை விளக்குக.

- இயேசு சபை, வின்சென்சியன் சபை, கார்மேல் சபை, கப்புச்சின் சபை.
- கல்விப்பணி: ஏழைகள், கல்வியறிவற்றோருக்கு, கல்வியைப் போதிப்பதற்காக கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டன. (இயேச சபை, கார்மெல் சபை)
- இரக்கப்பணி: ஏழைகளுக்கு உணவளித்தல் (வின்சென்சியன் சபை) சிறுவர், முதியோர், அனாதைகள், நோயாளரைப் பராமரித்து சாதாரணமக்கள் மத்தியில் எளிமையாக வாழ்ந்தனர்.
- இளைஞர் உருவாக்கம்: தொழில்முன்னிலை உருவாக்கத்தை வழங்கினர்.

(iii) இலங்கையில் பணியாற்றிய மிசனறிமார் மனித நேயப் பணிகளில் எவ்வாறு ஈடுபட்டன என்பதை விளக்குக.

- போத்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கள், இயேசு சபையினரால் அனாதைச் சிறுவர் இல்லங்களுக்கும், கல்வி நிலையங்களும், மருத்துவமனைகளும் ஆரம்பிக்கப்பட்டன.
- டச்சுக் காலத்தில் புனித யோசவ்வாய் ஆற்றிய மனித நேயப் பணிகள்.
- ஆங்கிலேயர் காலத்தில் கல்வி, மருத்துவப்பணிகளை அமெரிக்கா மிஷன், மற்றும் கத்தோலிக்க திருச்சபையினர் ஆற்றிய பணிகள். (உ+ம் கிறீன் மருத்துவமனை - மானிப்பாய், மக்லொயிட் மருத்துவமனை - இணுவில்)
- மனித உரிமை சமூகப்பணிகளுக்கு இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் பங்களிப்புச்செய்த இவளின் காணி அம்மையார்.
- சமூக நலன்புரி இரக்கப்பணி நிறுவனங்களை உருவாக்கல் (செடேக், வின்சென்டிபோல், Y.M.C.A., Y.W.C.A.
- மனித உரிமைகள், சமூதாய முன்னேற்றப்பணி, மருத்துவப்பணி (இன - மத பேதங்களை நோக்காது அனைவருக்கும் பணியாற்றினர்)

(iv) இன்றைய இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை நாட்டின் சமூக, நலன்புரிச் செயற்பாடுகளில் பங்களித்துள்ள விதத்தை விபரிக்குக.

- சமயப்பாகுபாடுகளின்றி எல்லோருக்கும் மனிதநேயப் பணிகளைத் திருச்சபை ஆற்றியுள்ளது. இப்பணிகளை இலங்கையிலாற்றும் கத்தோலிக்க நிறுவனங்கள் சில: கரித்தாஸ், சலேசி சபையின் இளைஞர் உருவாக்க மையங்கள், வின்சென்டி போல் சபையின் பணிகள், திருக்குடும்ப சபையினரின் மாற்றுத் திறனாளிகளின் உருவாக்கம் (ARK - உடுவில்) நல்லாயன் சபையினரின் திருமணமாகாத தாய்மார்களுக்கான மையங்கள், இயேசு சபை அகதிப்பணி (J.R.S.).
- அன்பை முதன்மையாகக் கொண்டு சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் பல அமைப்புகளூடா செயற்பட்டு வருகிறது.
- ஆன்மாக்களை மீட்பதே தூதுப்பணியின் நோக்கமானாலும், ஆன்மீகத் தேவைகளைப் போன்ற உடல் சார்ந்த தேவைகளிலும் அக்கறையுடன் செயற்படுகின்றது.
- மனித மாண்பைக் கருத்திற்கொண்டு, அது மீறப்படும்போது அதற்கெதிராகக் குர கொடுக்கிறது.
- நோயாளிகளின் நலம் பேணல், அநாதைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பல விசே தேவைகளையுடையவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பொருத்தமான கல் தொழிற்பயிற்சிகளை வழங்குகிறது.
- போர்க்காலத்தில் திருச்சபை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய மனித நேய உதவிக (உலர் உணவு, வீட்டுத்திட்டம், சுகாதார வசதிகள், மனித உரிமைச் செயற்பாடுகள்)
- MARR

7. *திருச்சபை கல்வி மட்டில் தனது விசேட கரிசனையைக் காட்டியுள்ளமையையும் இலங்கையின் கல்விக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பணிகளையும் விளக்கி, ஐரோப்பிய கட்டிடக் கலைக்கு திருச்சபை ஆற்றிய பங்களிப்பையும் தெளிவு படுத்துவர்.*

(i) 1960 இல் பாடசாலைகள் அரசுடமையாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட சாதகமான, பாதகமான விளைவுகளை விபரிக்குக.

- 1960ல் பாடசாலைகள் அரசுடமையாக்கப்பட்டமையால் திருச்சபைகளின் கட்டுப்பாட்டிலிருந்த பாடசாலைகள் அரச நிர்வாகத்திற்கு மாறின. இதனால் திருச்சபைக்கு சாதகமான நிலமைகளும், பாதகமான நிலைகளும் ஏற்பட்டன.

சாதக நிலைகள்:

- தேசிய மறைக்கல்வி நிலையமும் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களும் உருவாக்கப்பட்டன.
- திருச்சபைகளின் கட்டுப்பாட்டிலிருந்தபோது சமயப் போதனைகள் ஒழுங்காக நடைபெற்றன. அரச நிர்வாகத்துக்கு மாறியபோது இந்நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதை நிவர்த்தி செய்ய மறைக்கல்வித் திட்டங்களை ஒழுங்குபடுத்த மேற்படி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- மறைக்கல்வி நூல்கள் ஆக்கப்பட்டு அச்சிடப்பட்டன.
- பங்குகள் தோறும் மறையாசிரியர்கள் உருவாக்கப்பட்டனர்.
- ஞாயிறு மறைக்கல்வித்திட்டம் உருவானது.
- பிற சமயத்தாருடன் கத்தோலிக்க மாணவரும் ஆசிரியரும் இணைந்து செயற்பட சந்தர்ப்பம் கிடைத்தது.
- [illegible]

பாதக நிலைகள்:

- கிறிஸ்தவத்தைக் கற்பிப்பதற்கான பாடவேளைகள் குறைக்கப்பட்டன.
- கிறிஸ்தவ சமய செயற்பாடுகளுக்கு முன்பு இருந்த சுதந்திரம் கிடைக்கவில்லை.
- கிறிஸ்தவ மாணவர்கள் ஏனைய சமயங்களைக் கற்கவேண்டிய சூழலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.
- கிறிஸ்தவ நிர்வாகத்தின் கீழிருந்த பாடசாலைகள் பல பறிபோயின.
- கல்வித் திட்டமிடல், கல்வி நிர்வாகம் ஆகிய விடயங்களில் கிறிஸ்தவர்களின் பங்கேற்பு குறையும் நிலை ஏற்பட்டது.

* [illegible]

(ii) இலங்கையின் கல்விக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பணிகளை விளக்குக.

- இலங்கையின் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களில் டொன்பீற்றர், S.G. பெரேரா, எட்மன் பீரிஸ், பீற்றர்பிள்ளை, தனிநாயகம் போன்ற ஆளுமைகள் குறிப்பிடத்தக்கவர்கள்.
- கல்வி நிர்வாகத்தில் நிர்வாகிகளாகவும், அதிபர்கள், ஆசிரியர்களாகவும் பெரும் எண்ணிக்கையான கிறிஸ்தவர்கள் பணியாற்றினர்.
- கணிசமான குருக்கள், துறவியர், கன்னியர்கள் பணிபுரிகின்றனர். இன மத பேதமின்றி கிறிஸ்தவ பாடசாலைகளில் ஏனைய சமய மாணவரும் கல்வி கற்கின்றனர்.
- இலங்கையில் ஆங்கிலக் கல்விப் போதனையில் திருச்சபை ஆற்றிவரும் பங்களிப்புக் கணிசமானது.
- கல்வித்துறையில் ஒழுக்கம் பேணுவதில் கிறிஸ்தவ பாடசாலைகள் முன்னணி வகிக்கின்றன.
- கொழும்பிலுள்ள அக்குவைனஸ் கல்லூரி, திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது பல்கலைக்கழக நிலைக்கு உயர்ந்துள்ளது. ஆங்கிலமும், பல துறைசார் கல்வியும் சிறப்பாக நடைபெறுகிறது.

(iii) மத்திய கால ஐரோப்பிய கட்டடக்கலைக்கு திருச்சபை ஆற்றியுள்ள பங்களிப்பை விபரிக்குக.

- மதச் சுதந்திரம் பெற்றதையடுத்து கட்டிடக்கலை வளர்ச்சி பெற்றது.
- உரோமைய கட்டிட முறையில் ஐரோப்பாவில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. இதே காலப்பகுதியில் பைசன்ரைன் கட்டிடமுறை கிழக்கில் வழக்கிலிருந்தது.
- கோதிக் என்றழைக்கப்படும் குழுவினர் தம் சொந்த கட்டிடக் கலையை கோதிக் என்ற பெயரில் வளர்த்தனர். கோதிக் என்ற பெயருடன் அக்கலையைத் திருச்சபை ஐரோப்பா முழுவதும் வளர்த்தது. (கோதிக் என்றால் பொருத்தமற்றது எனப் பொருள்படும்) இம்முறையிலும் பல ஆலயங்கள் கட்டப்பட்டன.
- பசிலிக்கா என்பது உரோமையரின் மக்கள் ஒன்றுகூடும் இடமாகும். அதைத் திருச்சபை உள்வாங்கி அம்முறையில் தனது பேராலயங்களை அமைத்தது.
- திருச்சபை ஐரோப்பாவில் ஏற்கனவே வழக்கிலிருந்த கட்டிடக்கலைகளை (மொசேயிக்) பயன்படுத்தித் தனது ஆலயங்களையும், நிறுவனங்களையும் உருவாக்கியது. இதன் மூலம் இக்கட்டிடக்கலைகள் அழியாது வளர்வதற்கு உதவியது.

(iv) ஆயர் கிறிஸ்தோப்பர் போஞ்சின் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவர் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் விபரிக்குக.

- கி.பி. 1823 செப்ரெம்பர் 23ம் திகதி பிறந்தார்.
- 1847இல் பரிஸ் மறைத் தூதுச் சபையின் அங்கத்தவராக இந்தியாவிற்கு வந்தார். அங்கு 9 வருடங்கள் பணியாற்றினார்.
- கி.பி. 1856 இல் இலங்கைக்கு வந்தார். யாழ்ப்பாணத்தில் அமலமரித்தியாகிகள் சபையில் சேர்ந்து பணியாற்றினார்.
- இலங்கைத் தீவிற்கு வருகை தந்த காலம் தொடக்கம் இலங்கை கத்தோலிக்க சமயத்தின் குரலொலியானார்.
- அவரது முயற்சியின் பெறுபேறாக இந்நாட்டிலே உதவி நன்கொடை பெறும் பாடசாலை முறை உருவாகியது. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை ஊக்குவிக்க அவர் உழைத்தார். உதவி பெறும் பாடசாலைகளின் தந்தை என அழைக்கப்பட்டார்.
- சுயமொழிக் கல்வி பற்றி அரசிற்கு ஆலோசனைகளை முன்வைத்தபோது ஆங்கில மொழியைப் போன்று தேசிய மொழிகளும் பாடசாலைக் கல்வியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என அரசிற்கு வலியுறுத்தினார்.
- அரசின் நியாயமற்ற கல்வி முறையையும், கிறிஸ்தவ சபைகளுக்கு பொதுவான கிறிஸ்தவ சமயத்தை மட்டும் கற்பிக்கும் பாடசாலை கல்வி முறைமையை கடுமையாக விமர்சித்தார்.
- யாழ்ப்பாண ஆயராக நியமிக்கப்பட்ட அவர் பின்னர் இந்நாட்டின் முதலாவது பேராயராக நியமனம் பெற்றார்.
- சுதேச குருமாரை பயிற்றுவிப்பதற்காக இலங்கையின் முதலாவது குருமடமான மடுத்தினார் குருத்துவக் கல்லூரியை கி.பி.1869 இல் ஆரம்பித்தார்.
- கி.பி. 1870 இல் யூலை மாதத்தில் மடுத்திருத்தலத்தின் விழாவினை ஆரம்பித்து அது ஒவ்வொரு வருடமும் நடைபெறுவதை உறுதிப்படுத்தினார். இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்து யாத்திரிகர்களை வரவழைத்தார்.
- கி.பி. 1893 இல் புனித சூசையப்பர் கல்லூரியை மருதானையில் நிறுவினார்.

8. *திருச்சபை எவ்வாறு கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒற்றுமையையும் ஏனைய சமயங்களுடனான உரையாடலையும் வலியுறுத்துகின்றது என்பதை விவிலிய வரலாற்றுப் பின்னணிகளில் இருந்து அறிவதோடு, இலங்கையின் பல் இன, மத சூழமைவில் கிறிஸ்தவர் என்னும் வகையில் எவ்வாறு புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தலாம் என்பதனையும் விளங்கி தெளிவர்.*

(i) "கிறிஸ்தவ சபைகளுக்கிடையே நிலவிய குரோதப்போக்கு 20ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக குறைய ஆரம்பித்தது." இதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

- மறைபரப்பு நாடுகளில் மறைபரப்புப் பணியில் ஈடுபடுவதற்கு கிறிஸ்தவ சபைகள் ஒன்றாக வருவது அவர்களது போதனைக்கும் சாட்சியத்துக்கும் அவசியமானதாக உணரப்பட்டது. இதனால் தமக்கிடையேயான குரோதமனப்பான்மைகளைக் களைந்து கிறிஸ்துவின் சபையாக ஒன்றிணைந்து செயற்பட விரும்பினர்.
- ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சபைகளுக்கிடையேயான போட்டிகளும், பொறாமைகளும் சுதேசிகளுக்கு துன்மாதிரியாக இருந்தன. இதை கிறிஸ்தவ சபைகளும் உணர்ந்தனர்.
- சுதேசிகள் கல்வி வளர்ச்சியைப் பெற்றமையினால் தேசியவாதம் வளர ஆரம்பித்தது. எனவே ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற தேசிய நிலையில் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய தேவையை உணர்ந்தனர்.
- இப்படியான சிந்தனைப் போக்கு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சிந்தனைப் போக்குகளிலும் பிரதிபலித்தது. இதனால் திருத்தந்தை 23ம் அருளப்பர் திருச்சபை உலகின் ஒற்றுமையின் அடையாளமாக விளங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி கிறிஸ்தவ சபைகளிடையே ஒன்றிப்பை முக்கியத்துவப்படுத்தினார். அவ்வேளை கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய தனியான ஏட்டினையும் சங்கம் முன்வைத்தது.

(ii) கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த எவ்வாறான விவிலிய, வரலாற்று ஆதாரங்களை முன்வைக்கலாம் என்பதனை விளக்குக.

விவிலிய ஆதாரங்கள்:

- இயேசுவின் ஒன்றிப்பிற்கான செபம் (யோவான் 17:21) "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!"
- 1 கொரி. 12:12 "உடல் ஒன்றே. உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்."
- 1கொரி. 1:12 - 13 "உங்களுள் ஒவ்வொருவரும் 'நான் பவுலைச் சார்ந்துள்ளேன்' என்றோ 'நான் அப்பொல்லோவைச் சார்ந்துள்ளேன்' என்றோ 'நான் கேபாவைச் சார்ந்துள்ளேன்' என்றோ, 'நான் கிறிஸ்துவைச் சார்ந்துள்ளேன்' என்றோ சொல்லிக் கொள்கிறீர்களாம். கிறிஸ்து இப்படிப் பிளவுபட்டுள்ளாரா? அல்லது பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டார்? அல்லது பவுலின் பெயரிலா நீங்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டீர்கள்?"

வரலாற்று ஆதாரங்கள்:

- [illegible]
- ஆரிய, நெஸ்தோரிய திரிபுக் கொள்கைகள்.
- 11ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கீழைத்தேய, மேலைத்தேய பிரிவினை.
- 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சீர்திருத்த சிந்தனைகள்.
- 20ம் நூற்றாண்டில் ஏற்பட்ட தன்னார்வத் திருச்சபைகளின் தோற்றம்.

(iii) கிறிஸ்தவர் என்னும் வகையில் இலங்கையிலுள்ள பல்வேறு இனங்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான உமது பரிந்துரைகளை முன்வைக்குக.

- இலங்கை பல இன மக்களைக் கொண்ட நாடு என்பதை ஏற்றுக் கொள்ளல். இதனடிப்படையில் எல்லோரும் சம உரிமையுடையவர்கள், எல்லோரும் அயலவர்கள் என்ற நிலைப்பாட்டினை உருவாக்குதல்.
- ஒவ்வொருடைய இனரீதியான தனித்துவமும் கலாசார அம்சங்களும் பேணப்பட வேண்டும்.
- ஒவ்வொரு இனமும் மற்றைய இனத்தின் சிறப்பான கலாச்சார அம்சங்களை அறிந்து கொள்வது.
- பாடசாலைகளில் மற்றை இனங்களின் சிறப்பம்சங்கள் பற்றிய விடயங்களைப் பாடவிதானத்தில் உள்ளடக்கல்.
- ஒரு தாய்மொழியைக் கொண்டவர் மற்றைய மொழியைக் கற்பதன்மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

(iv) இலங்கையிலுள்ள பல்வேறு மதங்களுக்கிடையில் எவ்வாறு புரிந்துணர்வை ஏற்படுத்தலாம் என்பதனை விபரிக்குக.

- இலங்கை பல சமயத்தவர்கள் வாழும் நாடு என்பதை ஏற்றுக் கொள்ளல். இதனடிப்படையில் அவரவர் மத உரிமைகளை மதித்தல்/பேணுதல்.
- ஒவ்வொரு சமயத்தின் நடைமுறைகள், விழாக்கள், சடங்குகளின் சிறப்பை அறிவது மத இணக்கப்பாட்டுக்கு வழிவகுக்கும்.
- சமய உரையாடல்களை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- ஏனைய மதங்களில் உள்ள சிறப்பம்சங்களை அறிய வாய்ப்பளித்தல்.
- எல்லா மதங்களும் உயர் மதிப்பீடுகளையும் அதை அடைவதற்கான வழிகளையுமே முன்வைக்கின்றன என்பதை உணரச்செய்தல்.
- எந்தவொரு மதத்தின் எவ்விடயத்தையும் மற்றைய மதத்தவர் மேல் திணிக்கக்கூடாது.

8. (i) - YMCA, YWCA [illegible]
- [illegible]
- 1947 [illegible]
- 1948 [illegible]
- 1949 [illegible]



- 1952 [illegible]

இது தொடர்பாக ஏதேனும் தெரிவிப்பதற்காக கீழ் வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**011 2784037**
**011 2785231**
**011 2785216**